Registered as a NewsPaper

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

விலை ரூபா 7.00

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 13 | 26-04-2003 | சனிக்கிழமை | ஓசை 67

தேவையை நிறைவு செய்து
நேரத்தை மீதப்படுத்த
புடைவைத் தெரிவுக்கு
வவுனியா நகரில்...
SHANDHA TEX
பஜார் வீதி, வவுனியா.
T.P: 24-22879 (7835)

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதை இடைநிறுத்தியமை

# யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல் செய்ய

# அரசிற்குப் புலிகள் வழங்கிய காலஅவகாசமே!

## முன்னாள் யாழ்ப்பாண ஆயர் தியோகுப்பிள்ளை காலமானார்!



இளைப்பாறிய கத்தோலிக்க யாழ். ஆயர் மேதகு வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை நேற்று வெள்ளி காலை காலமாகிவிட்டார்.

இவர் யாழ். கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் மட்டுமல்ல ஈழத்தமிழர் சமுதாயத்தின் மதிக்கப்படும் பெரியாருமாவார். இவர் மதிநுட்பமும், அஞ்சாமையும், இறைஞானமும், நிறை ஆளுமையும் உடைய கல்வியாளர். இவர் 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ம் திகதி கரம்பொன் என்னும் ஊரில் பிறந்தவர். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்களில் இருந்து புலிகள் விலகவில்லை என்கிறார் அன்ரன் பாலசிங்கம்

(லண்டன்)

விடுதலைப்புலிகள் சமாதான நடவடிக்கைகளில் இருந்து விலகவில்லை. போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள விடையங்களை அமுல்ப்படுத்த சிறிலங்கா அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கும் வகையில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத் தியுள்ளோம் என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.



சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் ரோய்டர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியில் உள்ள விடயங்கள் குறித்து தமிழ் நெற்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அன்ரன்பாலசிங்கம் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

(08ஆம் பக்கம் பார்க்க)

கடலில் போர் நிறுத்த வரைபு

## ஏற்படுத்திய சர்ச்சையை அடுத்து கண்காணிப்புக்குழு அறிக்கை!

(கொழும்பு)

கடலில் போர்நிறுத்த வரைபு தொடர்பாக சிறிலங்காவில் எழுந்துள்ள பெரும் சர்ச்சையை அடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த ஆண்டு பெப்ரவரியில் கையெழுத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையானது இருதரப்பின் உந்துதலின் பாற்பட்டதாகும்.

இருதரப்புக்களும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கண்காணிப்பு பணிகளால் உறுதி செய்கின்றமையானது இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும் பிணக்குகளை நடுநிலையோடு தீர்த்து

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரசன்னத்தோடு ஜப்பான் மாநாடு நடைபெறும்

ஜப்பான் நம்பிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரசன்னத்தோடு ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறும் என தாம் நம்புவதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. ஜப்பான் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடர வேண்டும் என்பது குறித்து நம்பிக்கையுடன் இருக்கின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கடல் பிரதேசத்தில் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க இந்தியாவை அழைக்க வேண்டும்

எதிர்க்கட்சிகள் சார்பில் கதிர்காமர் கோரிக்கை

(கொழும்பு)

கடற்பிரதேசத்தில் யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்வதற்கென இந்தியா உட்பட இரண்டு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கொழும்பில் நேற்றுக் காலை ஆறு எதிர்க்கட்சிகள் சேர்ந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கருத்து வெளியிடும் போது,

(08ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை நடைமுறையில் புதிய அணுகுமுறை தேவை!

பிரதமரிடம் ஜோசப் பரராசசிங்கம் வலியுறுத்து

தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தை நடைமுறையில் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமாறும் அதன் மூலம் தமிழ்மக்களின் நியாயமான எதிர்பார்க்கையை தாமதம் இன்றி நிறைவேற்றுமாறும் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் சிறிலங்கா பிரதமரைக் கேட்டுள்ளார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்து 13 மாதங்கள் நிறைவடைந்துவிட்டது. பல கட்டமான பேச்சுவார்த்தைகள் பல

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை ஓரம்கட்ட அரசு முனைந்தால் புலிகள் அதற்குப் பலியாகமாட்டார்கள்!

சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியதாக அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு



(அலுவலக செய்தியாளர்)

தற்போது ஏற்பட்டுள்ள இந்த கால அவகாசத்தைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளை ஓரம்கட்ட அரசு தீர்மானித்தால் அதற்கு எந்தவிதத்திலும் புலிகள் பலியாகமாட்டார்கள் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தம்மிடம் தெரிவித்ததாக அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று அரசியல்துறைப் பொறுப்பாளருடன் நடந்த சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுடன் பேசுகையில் அமைச்சர் சந்திரசேகரன் அவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும், மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரன் குழுவினருக்குமிடையிலான சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும், மலையக மக்கள் முன்னணி தரப்பில் அதன் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன், மலையக மக்கள் முன்னணி கொழும்பு மாவ

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்கள் 27 பேர் விடுதலை

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு சிறிலங்காக் கடற்படையினரால் சிறைவைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 27 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மன்னார் நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ள 27 மீனவர்களும் இன்னும் ஓரிரு தினங்களில் இந்தியா செல்வார்கள்.

## பெற்றோல் விலை ஒரு ரூபாய் அதிகரிப்பு

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை நேற்று நள்ளிரவு முதல் ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இந்த நடைமுறை அடுத்த அறிவித்தல் வரும் வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

வை. சிவாஜி என்பவரது மூக்குக் கண்ணாடி 24.04.2003 அன்று கற்சிலைமடுவிற்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஜீவா உணவகம் (பொன்னம்பலம் வைத்திய சாலை முன்பாக) இரணைப்பாலை வீதி புதுக்குடியிருப்பு என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (3202)

## தற்கொலை

(அலுவலக செய்தியாளர்)

விசுவமடுப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தி மரணமானார்.

மேற்படி சமபவம் பிரமந்தனாறு 14ஆம் வாய்க்கால் பகுதியில் கடந்த 24ஆம் திகதியன்று இடம் பெற்றுள்ளது.

ஆறுமுகம் நடராசா (வயது-46) என்பவரே மேற்படி மரணமானவராவார். விசுவமடு காவல்துறையினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

# திரியாயில் மீளக்குடியேறும் மக்களுக்கு வீடுகளை வழங்க த.பு.க. நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலை திரியாய் கிராமத்தில் மீளக்குடியேறி வரும் மக்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வகையிலான நடவடிக்கையினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் மேற்கொண்டுள்ளனர். இதற்கமைய கட்டுக்குளம் பகுதியில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற நிகழ்வின் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், தேசியப்பட்டியல் உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் கோ. மாதவராசா, கழகப் பணிப்பாளர் சின்னையா குமரகுருபரன் ஆகியோர் மேற்படி வீடமைப்புத் திட்டத்திற்கான அத்திவாரக் கற்களை நாட்டி வைத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மீள் குடியேற்ற நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுவின் பணிமனையும் இங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. குச்சவெளி பிரதேச செயலாளர் ஜெயச்சந்திரா இந்தப் பணிமனையின் பெயர்ப் பலகையினை திரைநீக்கம் செய்து வைத்தார். விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் மேற்படி பணிமனையினைத் திறந்து வைத்தார்.

இதேவேளை, புதிதாக வங்கிக் கணக்கினை ஆரம்பித்தோருக்கான வங்கி சேமிப்புப் புத்தகங்களும் இங்கு வழங்கப்பட்டன. திரியாய் விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.தில்லைநாதன் இதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டிருந்தார். (லோ)

# இல. செஞ்சிலுவை தொண்டர்கள் கற்கைச் சுற்றுலா புறப்பட்டனர்

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளி/முல்லை/வவுனியா ஆகிய மாவட்ட கிளைகளைச் சேர்ந்த 24 தொண்டர்கள் கற்கைச் சுற்றுலாவில் கலந்து கொள்ளும் முகமாக நேற்று அந்தந்த மாவட்டக் கிளைகளிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

மேற்படி தொண்டர்கள் திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி ஆகிய மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கிளைகளுக்குச் சென்று அங்குள்ள தொண்டர்களுடன் கலந்து செயற்திட்ட நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய மனிதாபிமான காரியாலய நிதியுதவியுடன், எக்கோஸ்பானிய செஞ்சிலுவை மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தினரால் மேற்படி தொண்டர்களுக்கான சுற்றுலா இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமைச் செயலக தேசிய திட்ட இணைப்பாளர் வே. குகதாஸின் தலைமையில் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# வட்டக்கச்சி - கிளிநொச்சி பிரதான வீதி சீர்கெட்ட நிலையில்

வட்டக்கச்சிப் பிரதேசத்தின் இராமநாதபுரத்திற்கும், கிளிநொச்சிக்கும் இடையேயான பிரதான வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக இவ்வீதி புனரமைக்கப்படவில்லை. ஏ-9 வீதி உட்பட ஏனைய வீதிகள் புனரமைப்புக்கு வட்டக்கச்சி புதுக்காட்டுப் பகுதியில் கிரவல் மண்ணை ஏற்றி இவ்வழியாகவே கொண்டு சென்றனர். இதனால் வீதி மேலும் பழுதடைந்துள்ளது.

இதனால் மக்கள் அவசரத் தேவைக்காகவும் அவசர மருத்துவ சிகிச்சைக்காகவும் வாகனங்களில் செல்ல முடியாதுள்ளது. (12)

# விளையாட்டு வீரர்களை இலங்கை மட்டத்தில் மிளிரச் செய்வது விளையாட்டுத் துறையின் கடமை

## கிளி.மேலதிக அரச அதிபர் வேதநாயகன்

(கிளிநொச்சி)

பிரதேச விளையாட்டுப் போட்டிகளையும் மாவட்ட விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துவதுடன் மட்டும் விளையாட்டுத் துறையினரின் கடமை நின்றுவிடாது. பின்தங்கிய நிலையில் உள்ள மாவட்டத்தின் விளையாட்டுத் துறையை வெளிக்கொணர்ந்து வீரர்களை மாகாண மட்டத்திற்கும் அகில இலங்கை மட்டத்திலும் அவர்களை மிளிரச் செய்வது அவர்களது கடமையாகவுள்ளது என்று கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத் துறை உத்தியோகத்தர்கள், தமிழீழ விளையாட்டுத்துறை உறுப்பினர்களுடன் கிளிநொச்சி செயலகத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஒன்றுகூடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்படவுள்ள வடகிழக்கு மாகாண கபடி மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான முன் ஆயத்த கூட்டமாக இவ் ஒன்றுகூடல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் கனகராசா, தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# "வேர்கள் துளிர்க்கும்" நூல் வவுனியாவில் அறிமுக விழா

(அலுவலக செய்தியாளர்)

கப்டன் வானதி வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட தமிழீழப் பெண்களின் சிறுகதைத் தொகுப்பான "வேர்கள் துளிர்க்கும்" நூல் அறிமுக விழா வவுனியா நகரசபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. வவுனியா மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செல்வி தேனிலா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை எல்லைப்படை மாவீரரான 2 ஆம் லெப். இந்திரனின் துணைவியார் இராஜேஸ்வரி ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை வவுனியா நகர் பிரதேசப் பொறுப்பாளர் செல்வி எழிலரசி ஏற்றி வைத்தார். தலைமையுரையைத் தொடர்ந்து நூலுக்கான அறிமுகவுரையை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி அலை நிகழ்த்தினார். தொடர்ந்து வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் சிறப்புரையினை ஆற்றியதுடன், நூலினையும் அறிமுகம் செய்து வைத்தார். நூலின் முதற்பிரதியை வவுனியா நகர் முஸ்லிம் பள்ளிவாசல் பொறுப்பாளர் அலீஸ் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதிகளை வவுனியா மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த வாகீசன், செல்வி அமுதா ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தனர். நூலுக்கான மதிப்பீட்டுரைகளை வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. மாணிக்கவாசகர் நாகேஸ்வரி, ஊடகவியலாளர் கனகரவி ஆகியோர் நிகழ்த்தியதைத் தொடர்ந்து பதிலுரையை கப்டன் வானதி வெளியீட்டகப் பொறுப்பாளர் உலக மங்கை ஆற்றினார். (லோ)

# அரச துறையில் கடமையாற்றும் ஊழியர்களைக் குறைக்க அவசியமில்லை

## அமைச்சர் வஜிர அபேவர்த்தன

(கொழும்பு)

அரச துறையில் கடமையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை எக்காரணம் கொண்டும் குறைக்க வேண்டிய அவசியமில்லை என்று பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் 21 ஆவது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் பங்குபற்றி அவர் உரை நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நிர்வாக சேவையில் உள்ள வெற்றிடங்களை எந்தவித தாமதமும் இன்றி நிரப்புவதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இலங்கை நிர்வாக சேவை புனரமைக்கப்பட வேண்டியது அவசியமானது.

சக்தி வாய்ந்த முகாமையாளர்களுக்கு பெருமளவு தேவை தற்சமயம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி கனகபுரம் ம.வி.யில் இன்று இலவச கண்பரிசோதனை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவையினரின் அனுசரணையுடன் யூனிய சேம்பர் நிறுவனத்தினால் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் இன்று இலவச கண்பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கப்படுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இன்று காலை 8.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை மேற்படி கண்பரிசோதனை இடம்பெறவுள்ளதால் கண்பார்வை குறைந்தவர்கள் இன்று நடைபெறவுள்ள கண்பரிசோதனை முகாமில் கலந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வண்ணம் தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

# புதிய நோர்வேத் தூதுவர் கொழும்பு வந்தார்

சிறிலங்காவுக்கான புதிய நோர்வேத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள கன்ஸ்கிறிஸ்சுவா சிறிலங்கா வந்துள்ளார். இவருடன் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கும் வருகை தந்துள்ளார். நேற்று முன்தினம் அதிகாலை ஐந்து மணிக்கு சிறிலங்காவுக்கு வருகை தந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நூர்தீன் மசூரை மீண்டும் மு.கா.வில் இணையக் கோரல்

வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூரை மீண்டும் முஸ்லிம் காங்கிரசுடன் இணையுமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டுள்ளார். முஸ்லிம் காங்கிரசின் பேரம்பேசும் சக்தியை வலுப்படுத்த முஸ்லிம் காங்கிரஸ் ஒற்றுமைப்பட வேண்டும் எனவும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று இருவரும் சந்தித்துப் பேசும்போதே ஹக்கீம் இவ் வேண்டுகோளை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பரந்தன் - முல்லை. வீதியில் தூசியினால் பெரும் பாதிப்பு

(உடையார்கட்டு)

பரந்தன்-முல்லைவீதியில் நாளாந்தம் வேகமாகப் போக்குவரவில் ஈடுபடும் ஊர்திகளில் கிளப்பப்படும் தூசியால் நாளாந்தப் பணியில் ஈடுபடுவோர் மிகவும் அவலத்தை எதிர்கொள்கின்றனர். தூசியால் பலர் சுவாசத்துக்கு திக்குமுக்காடுவது அன்றாட வாழ்வு நிகழ்வாக தென்படுகிறது. ஒரு ஊர்தியின் தூசியிலிருந்து ஒருவர் தன்னை வழமைக்குக் கொண்டுவர முன் மற்ற ஊர்தியின் தூசிக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. இது போன்ற காரணத்தால் அந்தக் கண நேரத்தில் விபத்து ஏற்படும் வாய்ப்பும் காணப்படுகிறது.

தூசியால் படும் இன்னல் ஒரு தினசரிப்பேச்சாக மாறிவிட்டது. (19)

# நிவாரண விநியோகம் தாமதம் மக்கள் பெரும் சிரமம்

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு பல நோக்கு கூட்டுறவுச்சங்கக்கிளைகளின் கட்டம் கட்டமான இடம் பெயர்ந்தோர் நிவாரண விநியோகத்தினால் மக்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர். புதுக்குடியிருப்பு ப.நோ.கூ சங்கக்கிளைகளில் அரிசி பற்றாக்குறை காரணமாக நிவாரண விநியோகம், அரிசி கையிருப்பில் உள்ள போது மட்டுமே இடம் பெற்று வருகின்றது. இவ்வாறு கட்டம் கட்டமாக நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்படுவதால் நிவாரணம் பெறச்செல்வோர் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர். (பா)


## போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு மாவட்ட அரச அலுவலர்கட்கு சிங்களம், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் தேர்ச்சியினை வழங்கும் பொருட்டு முல்லைத்தீவு கல்வி வலயத்தினால் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

பயிற்சி வகுப்புக்கள்.

**ஆரம்பப் பிரிவு,**

**உயர் பிரிவு** என இருவகையாக நடைபெறும்.

பயிற்சிக் காலம் 08 மாதங்கள்

ஆரம்பப் பிரிவு போதனாசிரியர்களுக்கு மணித்தியாலம் ஒன்றிற்கான கொடுப்பனவாக ரூபா 250.00 உயர் பிரிவு போதனாசிரியர்களுக்கு மணித்தியாலம் ஒன்றிற்கான கொடுப்பனவாக ரூபா 350.00. வழங்கப்படும்.

**தகைமை:**

மொழி சார்ந்த (சிங்களம்/ஆங்கிலம்) பட்டதாரியாகவோ அல்லது மொழி சார்ந்த ஆசிரியர்கள் பயிற்சிச்சான்றிதழ் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும். இளைப்பாறியவர்களும் இத்தகைமையுடைய ஏனையவர்களும் விண்ணப்பிக்கலாம். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 05.05.2003 இற்கு முன்பாக வலயக் கல்விப்பணிப்பாளர், வலையக்கல்விப் பணிமனை, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு சேர்ப்பிக்கவும்.

**த. குருகுலராசா,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்விப்பணிமனை,**
**முல்லைத்தீவு.**

(சி-7741)

# எம்மிடம் அணுவாயுதம் இருக்கிறது

# அமெ. செயலைப் பொறுத்து ஏற்றுமதிக்கும் தயார்

**- வடகொரிய அரச பிரதிநிதி அமெரிக்க பிரதிநிதியிடம் தெரிவிப்பு**

**எம்மிடம் அணு ஆயுதங்கள் இருக்கின்றன. ஆனால், எத்தனை இருக்கின்றன என்று கூறமுடியாது. சீனாவில் முத்தரப்புப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட வடகொரியாவின் அரசபிரதிநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

பீஜிங்கில் நடைபெற்ற முத்தரப்புப் பேச்சுக்கள் முடிவடைந்த பின்னர் சாதாரண முறையில் பேசிக்கொண்டிருந்த போது அமெரிக்க துணை வெளியுறவு அமைச்சரிடம் வடகொரியாவின் பிரதிநிதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா செயற்படுவதைப் பொறுத்து வடகொரியா அணு ஆயுதங்களை சோதித்துப் பார்த்து ஏற்றுதி செய்யக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றிய அனைவரும் காட்டமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளதால் பேச்சுவார்த்தை முடிந்து விட்டது என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார். அதிகாரிகள் தங்கள் தலைநகரங்களுக்குத் திரும்பி கருத்துக்களை மதிப்பிட்டு அடுத்து செய்யவேண்டியவை பற்றி தீர்மானித்தார்கள் என அவர் கூறியுள்ளார்.

வடகொரியா அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதாகவும் இதனால் அது உயர் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்குவதாகவும் அமெரிக்கா குற்றம் சாட்டிவருவது தெரிந்ததே. அத்தோடு அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு அதன் கீழான கட்டுப்பாட்டை ஒழுகி நடந்துகொள்ளுமாறு அமெரிக்கா வடகொரியாவிடம் கோரி வருகின்றது.

இதற்கு மறுப்புத் தெரிவித்துவரும் வடகொரியா தன்னிடம் அணுவாயுதம் இருக்கின்றது என அறிவித்துமுள்ளது.

இதேவேளை வடகொரியாவிடமுள்ள அணுவாயுதங்களை அழிப்பதோடு அணுவாயுத உற்பத்தியில் ஈடுபடாது தடுக்கும் நோககோடு வடகொரியா, அமெரிக்கா, சீனா ஆகிய முத்தரப்புப் பேச்சுவார்த்தை ஒன்று சீனத் தலை நகா பீஜிங்கில் நடை பெற்று நேற்று முன்தினம் முடிவடைந்துள்ளது.

## ஈராக்கின் துணைப்பிரதமர் அமெ.படையினரிடம் சரண்

(வாஷிங்டன்)

ஈராக்கின்முன்னாள் துணைப் பிரதமர் தாரிக் அசீஸ் அமெரிக்கப்படையினரிடம் தாமாகவே சரணடைந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

சதாம் ஹுஸைனுக்கு மிகுந்த நெருக்கமாக செயற்பட்டவரும் ஆங்கிலப் புலமையினால் உலகில் நன்கு அறியப்பட்டவரும் சதாமின் துணைப் பிரதமரான தாரிக் அசீஸ் விளங்கினார். இவர் சதாம், இருக்கும் இடம் பற்றிய தகவலைத் தரலாம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. 1936இல் மோசியில் பிறந்த இவர் ஒரு ஊடகவியலாளராகவும் பணி புரிந்தவராவார்.

சதாமின் அரண்மனையிலிருந்த ஒரு கிறிஸ்தவரான இவர் அமெரிக்க ஆதரவுடன் ஈரானுக்கு எதிராக ஈராக் நடத்திய தாக்குதலில் முக்கிய பாத்திரத்தை வகித்தார்.

1984இல் அமெரிக்க சனாதிபதி ரீகனை வெள்ளை மாளிகையில் சந்தித்துள்ளார். கடந்த பத்து ஆண்டுகளாக இவர் சதாமின் துணைப்பிரதமராக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கை மீள்மைக்கும் பணியை பொறுப்பேற்றுள்ள அமெரிக்காவின் ஓய்வுபெற்ற ஜெனரல் கானர்.

## ஈராக் மக்களைக் கொண்டு ஆட்சியமைக்கும் பணி அடுத்தவார இறுதியில் தொடங்கும்

**- மறுசீரமைப்பிற்குப் பொறுப்பாளர் அமெ.ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி**

(பாக்தாத்)

ஈராக்கில் அந்நாட்டு மக்களைக்கொண்டு ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகள் அடுத்த வார இறுதியில் தொடங்கும் என்று, அங்கு மறுசீரமைப்புப் பணியில் மேற்பார்வையிட்டு வரும் அமெரிக்க ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஜே-கார்ட்னர் தெரிவித்துள்ளார்.

பாக்தாத்தில் சதாம் ஹுசைனின் மாளிகையில் இது குறித்து கல்விமான்கள் முக்கிய இன குழுவினர் ஆகியோருடன் இவர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர் இருப்பதாகவும் அனைத்து அமைச்சகங்களும் சரியான இடத்திலிருந்து செயற்படும் என்றும் கூறியுள்ளார்.



சார்ஸ் வைரஸ் காய்ச்சல் தாக்கத்திற்கு அஞ்சி பீஜிங் நகரை விட்டு வெளியேறும் மக்கள் சிலர்

## தேவையற்ற விதத்தில் தேசப்பற்றை வலியுறுத்தும் அமெரிக்க ஊடகங்கள்

**-பி.பி.ஸி.பணிப்பாளர் சாடல்**

(லண்டன்)

பி.பி.ஸி.நிறுவனத்தின் தலைவர் ஈராக் யுத்தம் தொடர்பாக அமெரிக்க ஒலிபரப்பு நிறுவனங்களைச் சாடியுள்ளார்.

போர் விடயங்களை அறிவிக்கும் போது பாரபட்சமின்றி நடந்துகொள்ளவில்லை எனவும், தேவையற்ற விதத்தில் தேசப்பற்றை வலியுறுத்த முனைந்ததாகவும் பி.பி.ஸியின் பணிப்பாளர் நாயகம் குற்றம் சாட்டியுள்ளார். அமெரிக்கச் செய்தி வழி அமைப்புக்கள் தமது படைவீரர்களை வீர புருசர்களாகவும், ஈராக்கிய மக்களை விடுதலை செய்பவராகவும் சித்தரித்ததை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறிப்பாக கொக் நியூ என்ற செய்தி நிறுவனம் நடந்து கொண்ட விதத்தை பி.பி.ஸியின் தலைவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.




பிலிப்பைன்ஸ் நாட்டில் சார்ஸ் நோய் தாக்கப்பட்டுள்ளதாக சந்தேகப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் தாதியர்

## பொடோ சட்டத்தின் 21 ஆவது பிரிவு இந். அரசியல் சட்டத்திற்கு முரணானது

**- வை.கோ. சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்**

(சென்னை)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. பொடோச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளமை தொடர்பாக மத்திய அரசு தாக்கல் செய்துள்ள முரண்பட்ட மனுக்களை ஏற்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வாதிட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் நீதிபதிகளின் முன், தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் பி.பி.ராவ், பொடோ சட்டம் சரியானது என்றும், வளர்ந்துவரும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த இது போன்ற சட்டம் தேவையானது என்றும் வாதிட்டுள்ளார்.

பொடோச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வை.கோ குறித்து மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்கள் முரண்பாடானவை என்று, தமிழக அரசு சார்பில் ஆஜரான பி.பி.ராவ் நீதிமன்றத்தில் கூறியுள்ளார்.

வை.கோ.வின் வழக்கைப் பொறுத்தவரை சிறப்பு நீதிமன்றத்தில் அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பொடோச் சட்டம் 21ஆவது பிரிவின் படி, அவர் குற்றம் புரிந்தவரா இல்லையா என்பதை சிறப்பு நீதிமன்றம் தான் தீர்மானிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு வழக்கறிஞர் மேலும் கூறியுள்ளார்.

வை.கோ.சார்பில் ஆஜரான மூத்தவழக்கறிஞர் எப்.எப். நாரிமன் பொடோ சட்டத்தின் 21வது பிரிவு அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்றும் அரசியல் சட்டத்தின் 19 வது பிரிவின் மூலம் உறுதியளிக்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரத்தை இது பாதிக்கின்றது என்றும் கூறியுள்ளார்.



தி.மு.கழகம் கூட்டிய அனைத்துக்கட்சி மாநாடு




01) கப்பல்களின் அரசி என அழைக்கப்படும் நாடு எது?
இங்கிலாந்து

02) ஆறு குடியரசு கொண்ட நாடு எது?
யூகோஸ்லாவியா

03) இலங்கையை ஆட்சி செய்த முதல் பெண் அரசி யார்?
அனுலாதேவி

04) மனித உடலிலுள்ள தசைகள் எத்தனை?
639

05) சாரணியத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
பேர்டன்பவல்

06) டென்மார்க்கின் தேசிய பறவை எது?
வானம்பாடி

07) உலகிலேயே மிக நீளமான வீதி எது?
அலாஸ்காவிலுள்ள அன்கரேய் எனும் இடத்திலிருந்து தென் சில்லிவரை அமைந்துள்ள வீதி

08) தக்ளா மக்கான் பாலைநிலம் எங்கேயுள்ளது?
சீனா

09) நவீன வான் மண்டல ஆராய்ச்சிக்கு வித்திட்டவர் யார்?
நிக்லஸ் கொப்பநிகஸ்

10) புயலடிக்கும் நாடு என்று கூறப்படும் நாடு எது?
சிக்காகோ

11) முகத்தில், கால்களில் வளரும் முடியை அகற்ற அமெரிக்கா புதிதாகக் கண்டுபிடித்த கருவி எது?
லேசர் கருவி

12) உலகிலேயே அதிக நாட்கள் பாடசாலை நடைபெறும் நாடு எது?
சீனா (வருடாந்தம் 252 நாட்கள்)

13) ரஷ்யாவின் தேசிய விளையாட்டு எது?
சதுரங்கம்

14) பன்றி அழகுப் போட்டிநடைபெறும் நாடு எது?
அவுஸ்திரேலியா

15) பிரேஸிலின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் எது?
சோயா

16) காகிதம் முதன்முதலில் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
சீனர்களால்

17) நேபாளத்தில் எப்போது மழை பெய்வதாகக் கூறப்படுகின்றது?
மாலை நேரத்தில் மட்டுமே

18) புதன் கிரகத்தில் ஓர் ஆண்டில் எத்தனை நாட்கள் உண்டு?
88 நாட்கள்

19) முதல் பெண் விமானி யார்?
யேல் பிங்கல் ஸ்டீபன்

20) உலகிலேயே மிகவும் குளிராக உள்ள பாலைநிலம் எது?
கோபி பாலைநிலம்

21) தேயிலையை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு எது?
இந்தியா

22) இந்தியாவின் முதல் பிரதமர் யார்?
நேரு

23) எக்ஸ்றே கதிரைக் கண்டு பிடித்தவர் யார்?
உரோஞ்சன்

24) மனிதனின் விரல் நகங்கள் வருடமொன்றிற்கு எவ்வளவு அங்குலம் வளர்கின்றது?
12.5 அங்குலம்

25) இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயம் அமைந்துள்ள இடங்கள் எவை?
கட்டுநாயக்கா, கொக்கலை, பியகம

26) உலகில் கறுப்பு றோஜா என அழைக்கப்படுபவர் யார்?
நெல்சன் மண்டேலா

# உலகக் கிண்ண உதை பந்தாட்டம்

| வரிசைஎண் | ஆண்டு | நடந்த நாடு | வென்ற நாடு | இரண்டாம் இடம் |
|---|---|---|---|---|
| 01 | 1930 | உருகுவே | உருகுவே | ஆர்ஜண்டினா |
| 02 | 1934 | இத்தாலி | இத்தாலி | செக்கோசுலோவாக்கியா |
| 03 | 1938 | பிரான்ஸ் | இத்தாலி | ஹங்கேரி |
| 04 | 1950 | பிரேசில் | உருகுவே | பிரேசில் |
| 05 | 1954 | சுவிட்சர்லாந்து | ஜேர்மன் | ஹங்கேரி |
| 06 | 1958 | சுவீடன் | பிரேசில் | சுவீடன் |
| 07 | 1962 | சிலி | பிரேசில் | செக்கோசுலோவாக்கியா |
| 08 | 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து | மே.ஜேர்மன் |
| 09 | 1970 | மெக்ஸிகோ | பிரேசில் | இத்தாலி |
| 10 | 1974 | மே.ஜேர்மன் | மே.ஜேர்மன் | ஒல்லாந்து |
| 11 | 1978 | ஆர்ஜன்டினா | ஆர்ஜன்டினா | ஒல்லாந்து |
| 12 | 1982 | ஸ்பெயின் | இத்தாலி | மே.ஜேர்மன் |
| 13 | 1986 | மெக்ஸிகோ | ஆர்ஜன்டினா | மே.ஜேர்மன் |
| 14 | 1990 | இத்தாலி | மே.ஜேர்மன் | ஆர்ஜன்டினா |
| 15 | 1994 | அமெரிக்கா | பிரேசில் | இத்தாலி |
| 16 | 1998 | பிரான்ஸ் | பிரான்ஸ் | பிரேசில் |
| 17 | 2002 | யப்பான் | பிரேசில் | ஜேர்மனி |

## இளநீரிலுள்ள சத்துக்கள்

அதிக வழுக்கை இல்லாத தேங்காயின் இளநீரும் அந்த முற்றாத பருப்பும் சத்துக்கள் அதிகம் கொண்டவை ஆகும்.

இவை நமக்குப் புத்துணர்ச்சியை அளிக்கின்றன. இதில் மாச்சத்து-04 சதவிகிதம், புரதம்-0.1 சதவிகிதம், கொழுப்பு-01 சதவிகிதம் காணப்படுகின்றன.

அத்துடன் இதிலுள்ள அமினோஅமிலங்களின் அளவு பசும் பாலில் உள்ளதைவிட அதிகம் அதே போல இதில் சர்க்கரை விட்டமின்"**B**" பொட்டாசியம், குளோரின், சோடியம், பொஸ்பரஸ், மக்னீசியம், இரும்பு, தாமிரம், கல்சியம் போன்ற சத்துக்கள் அதிகம் உள்ளன.

வெயில் நேரத்தில் இளநீர் குடிப்பதால் உடலுக்கு ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் கிடைக்கும். புதிதாகப் பறித்தஇளநீர்தான் நல்ல பயன்தரும். பறித்துப் பல நாட்களாகி விட்டஇளநீர் எதிரான பலன்களையே தரும். முற்பகலில் இளநீர் குடிப்பது நல்லது. வயிறு முட்ட உணவு உண்டபின்பு இளநீர் குடிக்கக்கூடாது.

## எத்தனை விநாடி?

பொதுவாகச் சாதாரண ஒரு மனிதனுக்கு 100 கலோரிகளை இழக்க (அதாவது காபோஹைறேட் 25 கிராமில் கிடைக்கும் சக்தியின் அளவு) பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு எத்தனை விநாடிகள் தேவைப்படுகின்றது?


| செயற்பாடு | நிமிடம் |
|---|---|
| ஓடுதல் | 8-10 |
| சைக்கிள் மிதித்தல் | 11 |
| நீச்சலடித்தல் | 12 |
| பெட்மிண்டன் | 12-15 |
| ஜிம்னாஸ்டிக் | 15 |
| உதைபந்தாட்டம் | 15 |
| ஐஸ் ஹொக்கி | 15 |
| டென்னிஸ் | 15-18 |
| வேக நடை | 15-18 |
| தோட்டப்பராமரிப்பு | 20-25 |
| மெதுவாக நடத்தல் | 25-30 |

## வார்த்தைகளும்-நேரமும்

ஒருநாளைக்கு மனிதன் சராசரி முப்பதாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறான். நிமிடத்துக்கு நூற்றுஐம்பது சொற்களையும், மணிக்கு ஒன்பதாயிரம் சொற்களையும் பேசுகிறான்.
ஒட்டுமொத்தமாக மனிதன் பேசும் பேச்சுக்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்தால், சுமார் நான்கு மணி நேரம ஒரு நாளைக்கு அவன் பேசும் நேரம் எனக் கூறப்படுகிறது.

## உடல் பருமனை குறைக்க மின் அதிர்ச்சிக் கருவி

உடல் பருமனைக் குறைக்க பலர் பல வழிகளில் முயற்சி செய்து வருகின்றனர். அதில் ஒரு புதிய முறையாக மின் அதிர்ச்சிக் கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உடல் குண்டானவர்கள் நடந்து செல்லவே சிரமப் படுகின்றனர். அவர்கள் பருமனைக் குறைக்க அரை குறையாகச் சாப்பாடு சாப்பிட்டு பட்டினி கிடக்கின்றனர். தற்போது உடல் பருமன் குறைக்க மின் அதிர்ச்சிக் கருவி கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. பெருத்த வயிற்றை பெல்ட்டால் கட்டுவதற்கு மாற்றுவழி அந்தக் கருவி தான் என்று கூறுகின்றனர். அதை இத்தாலி நாட்டைச சேர்ந்த டாக்டர் வலிரியோ ஷிகைனா கண்டு பிடித் திருக்கிறார். தற்போது அமெரிக்கக் கொம்பனி விற்பனை செய்கிறது.



ஆறுமுகம் வீதி - வட்டக்கச்சியிலுள்ள வ.பொன்னுத்துரை என்பவரது வீட்டில் ஒரு பாக்கில் மூன்று கமுகங்கன்றுகள் வளர்ந் துள்ளன.



சீன உணவு விடுதி ஒன்றில் குழம்புக்குத் தயாராகும் எலி

# கருவளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் பிளாஸ்ரிக் பாவனை

பிளாஸ்ரிக் பொருட்கள் தயாரிப்பின் போது உபயோகிக்கப்படும் ஒரு இரசாயன மூலகமே "பிஸ்.'.போனல் ஏ" என்பதாகும்.

இம்மூலகம் நாம்பாவிக்கும் பிளாஸ்ரிக் பொருட்களில் இருந்து வெளியேறி உடலில் சேருமானால் கருவில் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்றும் கருச்சிதைவுக்கு வழிவகுக்கலாம் என்றும் கண்டுபிடிப்பு ஒன்று கூறுகின்றது.

இக்கண்டுபிடிப்பு தற்செயலாக நிகழ்ந்த ஒன்று என்பதுதான் விஷேசம்.

ஒஹியோ மாறிய கேஸ் மேற்குநாட்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெட்ரீசியா ஹண்ட் மற்றும் அவரது குழுவினர் எலிகளைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டிருந்த போது, பெண் எலிகளின் சினை முட்டைகள் விருத்திடைவதில் பிரச்சினைகள் ஏற்படுவதை அவதானித்தார் மரபணு விஞ்ஞானியான பெட்ரீசியா.

இது ஏன் என்று கூர்ந்து கவனித்தார். குரோமோசம்கள் ஒரு ஒழுங்கு நிலையில் இருக்கும் போது தான் அவை ஒரு ஒழுங்கில் பிரிந்து பெருக முடியும். ஆனால் எலிகளின் கலங்களில் உள்ள குரோமோசம்கள் ஒழுங்கு முறையில் அமையவில்லை.

இப்படி அமையாத தன்மை பெருமபாலும் இரண்டு வீதமாகவே இருக்கும். ஆனால் இந்த எலிகளிடமோ இது 40சதவீதமாகக் காணப்பட்டமை பெட்ரீசியாவைச் சிந்திக்க வைத்தது.

இவ்வெலிகள் ஒரு பிளாஸ்ரிக் கூண்டில் வைக்கப்பட்டிருந்தன இக்கூண்டு தேய்ந்து போய்க் காணப்பட்டது. இக்கூண்டைச்சுத்தம் செய்வதற்காக காரம்மிக்க கிருமிநாசினி பாவிக்கப்படுவதையும், அது பிளாஸ்ரிக்கில் தேய்மானத்தை ஏற்படுத்தி பிஸ்.'.போனல் ஏ என்ற இரசாயனப் பொருளை வெளியேற்றி இருக்கலாம் என்பதையும் இவர் அறிந்து கொண்டார்.

இதன் பின்னர் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் பெண் எலிகள் உடலில் புகுந்த இம்மூலகமே கரு முட்டை உற்பத்தி யில் ஒழுங்கின்மையை ஏற்படுத்தி இருக்கிறது என்பது தெரிய வந்தது.

இது தொடர்பான ஆய்வில் செயற்கையாக இம் மூலகம் குறைந்த அளவில் ஏற்பட்ட போது இந்த அசாதாரணமான நிலை மீண்டும் எலிகளிடம் தென்படத் தொடங்கியது.

இம் மூலகம் மனித ஹோர்மோன்களின் தொழிற்பாடுகளை பாதிக்கக் கூடியது என நம்பப்படுகின்றது.

இம் மூலகம் நாம் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பாத்திரங்கள், குளிர்பான போத்தல்கள்; குழந்தைப்பால் போத்தல்கள், போன்ற பொருட்களின் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றது.

இம் மூலகம் மனித உடலில் கலக்கும் போது எலிகளுக்கு ஏற்பட்டதைப் போன்ற மோசமான பின்விளைவுகள் குறிப்பாகப் பெண்களுக்கு ஏற்படும் சாத்தியம் உண்டென நம்பப்பட்டாலும் இன்னும் இது விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்படவில்லை.ஆய்வு இன்னும் தொடர்கின்றது.

நமது உடலில் ஏராளமான சுரப்பிகள் உள்ளன. இவை வெளிப்படுத்தும் சுரப்பிகள் அல்லது ஹோமன்கள் நமது உடலில் சரிவர தொழிற்பட்டு ஆரோக்கியம் பேணப்பட வேண்டும்.

பிஸ்.'.போனல் ஏ நமது உடலின் சுரப்பிகளின் தொழில்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கின்றதா என்பதை மையப்படுத்தி சில ஆய்வு கூடங்களில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

வயிற்றில் கரு உருவாகும் சமயத்திலும், பாலகர்களிடமும் இந்த இரசாயனப் பொருள் பாதிப்பை ஏற்படுத்துமா என்ற வினாவுக்கு விடைகண்டுபிடிக்கவே இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுவாக பிளாஸரிக் பொருட்களை அதிக அளவில் பாவிப்பதைக் தவிர்ப்பது நல்லது. குறிப்பாக தண்ணீர் மற்றும் உணவுகளில் பிளாஸ்ரிக் பாவனையை முடிந்தவரை தவிர்ப்பதே நல்லது.

பாவித்தாலும் நீண்டகாலத்துக்கு பயன்படுத்தாமல் புதிதாக வாங்கிவிட வேண்டும். பிளாஸ்ரிக் சூழலுக்கும் மாசான பொருள் என்பதும் கவனத்துக்குரியது.

## குளோனிங் பன்றி உறுப்பை மனிதனுக்குப் பொருத்தலாம்

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்குப் காத்திருப் பவர்களுக்கு நம்பிகை ஊட்டும் வகையில் இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளனர். மனிதனின் சிறுநீரகம் பாதிகப்படும் போது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்கின்றனர். மாற்று சிறுநீரகம் கிடைக்காத பட்சத்தில் இரத்தத்தைச் சுத்திகரிக்க ஆண்டுக்கணக்கில் டயாலிசிஸ் செய்யப்படுகிறது. சாதாரண பன்றியின் உறுப்பை எடுத்து மனிதனுக்குப் பொருத்தும் போது, அதை மனித உடல் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் குளோனிங் முறையில் உருவான பன்றியின் உறுப்பை மனித உடல் ஏற்றுக்கொள்ளும் என்பதை இங்கிலாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மனித உடல் நிராகரிக்கும் மரபணு அந்த குளோனிங் பன்றியில் இல்லை. அதனால் அதன் உறுப்பை மனித உடல் ஏற்றுக் கொள்கிறது. எனவே அதைப் பொருத்தலாம். அது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு காத்திருப்பவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது.

## மூட்டுவாத நோய்க்குப் புதிய சிகிச்சை

மூட்டுவாத நோயால் பாதிக்கபபட்டவர்கள் சிறிது தூரம் நடந்து செல்வதற்கே சிரமப்படுவார்கள். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகவலி இருக்காது.

ஆனால் கையையோ, காலையோ நம் இஷ்டம் போல் ஆட்டவோ,அசைக்கவோ முடியாத அளவிற்கு செயல் இழந்துவிடும். மூட்டுவாதம் என்பது பெரும்பாலும் 50 வயதிற்கு மேற்பட்டவர்களையே பாதிக்கின்றது)

இந்த நோய்க்கு முன்பு சிடிஸ் கேன்.எம்.ஆர்.ஐ. ஸ் கேன் மூலம் படம் பிடித்து அதன் பின்பு மூட்டு நீரை எடுத்து அதில் உள்ள செல்கள்.கிருமிகள், படிவங்களை அறிந்து அதற்கு தகுந்தால் போல் சிகிச்சை அளிததனர்.

ஆனால் தற்போது நவீன முறையாக உள்நோக்கி கருவி மூலம் குணப்படுத்தி விடலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இக்கருவியின் மூலம் மூட்டில் சிறிய துளையிட்டு மூட்டின் உட்பகுதியைப் பார்த்து நோயின் தன்மையை அறியவும் பரிசோதனை அறிமுகப்படுத்தபட்டு உள்ளது.

இந்தப் புதிய கருவி மூட்டுக்களின் உட்பகுதியை பரிசோதனை செய்வதுடன் தேவைப்பட்டால் இதன் மூலம் மூட்டு நீர், சவ்வு,திசு போன்றவைகளையும் சோதனைக்கு எடுத்துப் பரிசோதனை செய்து குணப்படுத்த முடியும்.

இந்தப் புதிய நவீன பரிசோதனை முறையை பல்வேறு மூட்டுவாத பாதிப்புக்களுக்கும் செய்ய முடியும்.

## புற்றுநோயால் மார்பகத்தை அகற்றாமல் தடுப்பது எப்படி?

புற்று நோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் மார்பகத்தை அகற்றாமல், அதைத் தடுத்த ஆராய்ச்சியாளர்கள் புதிய முறையைக் கண்டுபிடித்துள்ளனர். ஆட்கொலலி நோய்களில் ஒன்று புற்றுநோயாகும். பெண்கள் மார்பக புற்று நோயால் பாதிக்கப்படுகின் றனர். அறுவைச்சிகிச்சை மூலம் மார்பகத்தையே அகற்ற வேண்டியதாகிறது. மார்பக புற்று நோயால் பாதித்த பெண்கள் ஸ்கிரீனிங் சோதனை செய்துகொண்டால் மார்பகத்தை அகற்றாமல் தவிர்க்க முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இப்படிச் செய்யும் பெண்களுக்கு மார்பகம் அகற்றும் வாய்ப்பு மிகக குறைவு என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றர். ஸ்கிரீனிங் செய்ததால் கடந்த மார்ச் மாதத்தில் உயிர்ப்பு 21 சதவீதம் குறைந்துள்ளது என்று சுவீடன் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## [illegible]

கர்ப்பப்பை மாற்றி கருதரிக்க வைத்து சாதனை புரியும் நாள் வெகு விரைவில் நிகழப் போகிறது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். உலகில் 15 சதவீத தம்பதியர் குழந்தை இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைபாடுள்ளவர்கள் செயற்கை முறைக் கருத்தரிப்பின் மூலம் குழந்தை பிறப்பிக்க முயற்சிக்கிறார்கள். அதே நேரத்தில் பெண்ணின் கர்ப்பப்பையல் பிரச்சினை என்றால் கருத்ரிப்பது கடினம். அவர்களை கர்ப்பை மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கருதரிக்க செய்யும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று தெரியவந்திருக்கிறது. முதல் கட்டமாக ஒரு எலியின் கர்பப்பையை மற்றொரு எலிக்குப் பொருத்தி கர்ப்பமடையச் செய்யும் சோதனையில் சுவீடன் நாட்டு விஞ்ஞானிகள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்த விஞ் ஞானிகள் குழுவுக்கு தலைமை தாங்கிய டாக்டர் மாத்ஸ் அடுத்தகட்டமாக பெண்களின் கர்ப்பப் பையை மாற்றி கருத்தரிக்கச் செய்ய முயற்சிக்கப் போவதாக கூறியிருக்கின்றார்.

## உடல் பருமனாகாமல் இருக்க...

உடல் பருமனாகாமல் இருக்க குழந்தைப் பருவத்திலிருந்து தடுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உடல்பருமன் பெரியவர்களுக்கு இருந்தால் அதைக் குணப்படுத்துவது சிரமம். சிறு வயதில் அதை எளிதாகச் சமாளிக்கமுடியும்.

உடல் பருமன் நோய், மற்றும் இரத்தக் கொழுப்பைக் குறைப்பதற்கு மூலக்கல்லாக அமை வது உணவுப் பழக்க வழுக்கங் களை மாற்றுவது, உடல் பருமன், நோய உடல் உழைப்பால் செலவு செய்யப்படும் சக்தியைவிட உட்கொள்ளும் சக்தி மிக அதிகமாக இருப்பதால் ஏற்படுகிறது எனக் கண்டோம். எனவே அளவுக்கு அதிகமாக உணவு உட்கொள்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும். நோயாளி மாப்பொருட்கள் உட்கொள்வதை மரபு மருத்துவம் தடைசெய்கிறது. இனிப்பு அதிகமாகவுள்ள உணவு வகை களையும்,மாப்பண்டங்களையும் குறைக்க வேண்டும். அதிக கலோரிசக்தி அளிக்கும் கொழும்புச் சத்து நிறைந்த எண்ணை மற்றும் மாமிச வகைகளை நிறுத்த வேண்டும். நார்ச்சத்து நிறைந்த, அதே சமயம் குறைந்த சக்தி அளிக்கும் காய்கறி, கீரை வகைகள், தீட்டப்படாத அரிசியால் சமைத்த உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும். எடையைக் குறைக்க விரும்பும் நபர் ஒரு நாளைக்கு சுமார் 1000 கிராம் கலோரி சக்தி அளிக்கும் உணவுக்குமேல் உண்ணக் கூடாது. இருந்தாலும் உடலுக்குத் தேவையான ஊட்டம், நுண் ஊட்டம் நிறைந்த பொருட்களைப் பயன்படுத்தி எந்தக் குறை பாட்டு நோயகளும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## மனித உடல் வளர்ச்சி நிலை

சுற்றுப்புறச் சூழலும், நல்லுணர்வும் மனிதர்களின் சராசரி உயரம் மற்றும் ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கிறது. ஆனால் மிகக் குள்ளத்தன்மை போன்றவை பரம்பரையாக (inherit) வரும் ஜீன் கட்டளைப்படி அமைகிறது. அதை மாற்ற முடியாது. சராசரி வளர்ச்சியில் சிறிது உந்துதலாக மேலே குறிப்பிட்டவை அமைகிறது. ஓர் குழந்தை பிறக்கும் போது சுமார் 50 செ.மீ உயரமே இருந்தாலும் 2 வருடங்களில் 86 செ.மீ உயரம் வளர்ச்சியடைகிறது. அடுத்த ஐந்து வருடங்களில் 7செ.மீ - ம் அடுத்தடுத்த வருடங்களில் சுமார் 5 செ.மீ உயர வளர்ச்சி காணப்படுகிறது. முழுமையாக 21 வருடங்களில் மனித உடல் வளர்ச்சி நின்றுவிடுகிறது. (அதற்குப்பின் எந்த மருந்தும், மாயமும் உயரமாக்காது) குள்ளமானவர்களைவிட உயரமானவர்களுக்கு சக்தி(energy) அதிகம் தேவைப்படும். கடந்த 50 வருடங்களில் தற்போதைய மனிதர்களின் உடல் உயரமும், ஆரோக்கியமும் நன்கு வளர்ந்துள்ளது.

## தியானம் ஆயுளை அதிகரிக்கும்

தியானம் செய்வது மன அமைதியைக் கொடுக்கும். அத்துடன் இரத்த அழுத்தத்தையும் குறைக் கின்றது. ஜீரணத்தையும் சரி செய்கின்றது. தினமும் அரை மணி நேரம் தியானம் செய்வது ஆயுளை நீடிக்கின்றது.

இவ்வாறு கூறியுள்ளவர்கள் அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக்கழக நிபுணர்கள்

## கோழிகளுக்கு தொற்று நோயும் தடுப்பு முறையும்

தற்போது வறட்சி உச்சமாக இருப்பதால், வருகின்ற வைகாசி மாத முடிவில் கோழிகளுக்கு மிகவும் வேகமாகத் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்படும் என்பது அனுபவ ரீதியாக அறியப்பட்டுள்ளது.

அவ்வகையில், முதலில் கோழிகளுக்கு ஏற்படும் வைரஸ் நோய்களான ரணிக் கற்றை கட்டுப்படுத்த உடன் அவ்வப்பகுதி அரசாங்க கால்நடை வைத்தியரை அணுகி, உங்கள் கோழிகளை அபாய நோயிலிருந்து காப்பாற்றிக்கொள்ளமுடியும்..

அறிகுறிகள் :-

வெள்ளை, பச்சை கலந்த கழிச்சல் எல்லா வயதுக் கோழிகளையும் தாக்கும். இறப்புவீதம் 90-100.மிக விரைவாகப் பரவி 01 வாரத்திற்குள் எல்லாக் கோழிகளையும் அழித்துவிடும்.

இந்நோய் ஏற்பட்ட கோழிகளுக்கு சிகிச்சை அளித்துப் பயன் இல்லை. மற்றும் கம்போரா, மரெக்ஸ், கோழியம்மை போன்ற வைரஸ் நோய் கோழிகளைத் தாக்கும் உயிர் கொல்லியாகும்.

தடுப்பு முறைகள்:-

01ம் தடுப்புக் கோழிக்குஞ்சுகள்:- 07 நாள் வயதுடையனவாக இருக்கும் போது, வாய்மூலம் ரணிக்கட் தடுப்பு மருந்தினைக் கொடுக்க வேண்டும். 21 நாள் வயதுடையதாக இருக்கும் போது, தடுப்பு மருந்து வாய் மூலம் கொடுக்க வேண்டும். இதன் பின்னர் 02ம், 03ஆம் மாதத்தில் ரணிக்கட் தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும். திரும்பவும் 03 மாதத்திற்கு 01 தடவை கொடுக்கலாம்.

# யுத்த அபாய சூழ்நிலைக்கேற்ப நாட்டைத்தயார்ப்படுத்துக

## - சிஹல உறுமய அரசிற்கு கோரிக்கை

(கொழும்பு)

**புலிகள் மீண்டும் யுத்தம் ஒன்றுக்கு ஆயத்தமாகும் நிலை தோன்றுவது போல் உள்ளதால் நாட்டை யுத்த அச்சுறுத்தல் ஒன்றிற்குத் தயார் படுத்துமாறு சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன அறிக்கை ஒன்றின் மூலம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளார்.**

அவ்வறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது;

புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகியிருக்கின்றனர் இதனைப்பயன்படுத்திதமது தேவைகளைப் பெற்றுக்கொள்ள அல்லது போர் தொடுக்கஇடம் இருக்கிறது இவ்விரண்டில் எது நடந்தாலும் நாட்டிற்குப் பாரிய அபாயமே. புலிகளின் எந்த நிபந்தனைகளுக்கும் கட்டுப்படாமல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச்செய்து நாட்டை யுத்த அபாயத்தில் உள்ளதாக அரசு அறிவிக்கவேண்டும் எனவும் அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்காப் பிரதமர் ரணில் மூதூருக்குச் சென்றார்

## ஹக்கீமுடன் சந்திப்பு

(கொழும்பு)

மூதூர்ப் பகுதியில் நிலவிவரும் பதற்றமான சூழ்நிலையை அறியும் நோக்குடன் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் திருகோணமலைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது திருகோணமலையில் தங்கியுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இதன்போது பிரதமருடன் அமைச்சர் மிலிந்த மொறகொட முப்படைத்தளபதிகளும் சென்றுள்ளனர்.

# துணுக்காய்ப் பிரதேச வீரமுரசு மாத நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய்ப்பிரதேசத்தில் வீரமுரசு மாத நிகழ்வு நடைபெற்றுள்ளது.

துணுக்காய் தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இன்நிகழ்வில் மாவீரர்களுக்கான பொதுச்சுடரினை மாவீரர் மேஜர் வசந்தன் அவர்களின் துணைவியார் ஏற்றி வைத்தார்.

சிறப்புரையினை முல்லை. மாவட்ட அரசியல்துறை நிர்வாகப்பொறுப்பாளர் .சு. இசையழகன் நிகழ்த்தினார். தொடர்ந்து தேறாங்கண்டல் போசாக்குப் பூங்கா சிறுவர்களின் நடன நிகழ்வும் யோகபுரம் மகாவித்தியாலய மாணவர்களின் நடன நிகழ்வும் இடம்பெற்றன. (பா)

# போர்ச் சூழலை உருவாக்குவதற்கு அரச விரோதச் சக்திகள் முயற்சி

## அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்ட சூழ்நிலையைப் பயன் படுத்தி போர்ச்சூழலை உருவாக்க அரச விரோத சக்திகள் முனைந்து வருவதாக அமைசர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்தைகளில் கலந்து கொள்வதை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளமை குறித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அறிவிப்பை சில தீய சத்திகள் தவறாகப்பயன்படுத்தி விடுதலைப் புலிகளைப் போருக்கு இழுத்து சிறிலங்கா அரசைச் சிக்கலில் மாட்டி வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருவ்தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிலையான சமாதானத்தை உருவாக்கி இன ஐக்கியத்துடன் மக்கள் வாழும்சூழ்நிலையை உருவாக்கவே சிறிலங்கா அரசு முயல்வதாகதெரிவித்துள்ள அவர் இதில் விடுதலைப் புலிகளும் தெளிவுடன் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

# த.வி.கூட்டணி - பிரதமர் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும், ரணிலுக்கும் இடையே விசேட சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.இதன் போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# படுவான்கரைப் பகுதித் தபாலகங்களுக்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள தபாலகங்கள் சொந்தக் கட்டடங்களின்றி வீடுகளிலும் குடிசைகளிலும் இயங்குவதாகக் கூறப்படுகின்றது. கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சிதைவடைந்த அஞ்சல் அலுவலகங்களை யாருமே கவனிக்க மறுப்பதாக மக்கள் விசனப் படுகின்றார்கள்.

படுவான் கரைப் பகுதிகளான பேரதீவுப்பற்று, பட்டிப்பளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மண்டூர், பெரியபோர தீவு, கொக்கட்டிச்சோலை ஆகிய அஞ்சல் அலுவலகங்கள் இனியாவது கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்

# "மே" நாள் முன்னேற்பாட்டில் முல்லை. மாவட்ட தே.எழுச்சிப் பேரவை

முல்லைத்தீவு மாவட்டத் திற்குட்பட்ட அனைத்து கோட்ட தே.எ.பேரவை உறுப்பினர்களுக்கான ஒன்று கூடல் நடைபெற்றது. நேற்று முல்லை. மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையின் ஒன்று கூடல் மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமானது.

இந் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாகவும் மற்றும் எதிர்வரும் 28 ஆம் திகதிஆனையிறவுப் பெருந்தளமீட்பு வெற்றி நாள் தொடர்பாகவும், எதிர் வரும் "மே" நாள் தொடர்பாகவும் சமகால அரசியல் தொடர்பாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் செ.முகுந்தன் விளக்கக் கருத்துரை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து முல்லைத் தீவு மாவட்ட மக்களால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வெற்றி நினைவுப் பரிசு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு "மே" நாள் நிகழ்வினை எமது மாவட்டத்தில் சிறப்பாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளாக புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, அலம்பில் ஆகிய பிரதேசங்கள் இணைந்து முல்லைத்தீவு நகர மைதானத்திலும் மாங்குளம், பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய பிரதேசங்கள் இணைந்து மல்லாவி வண்ணன் விளையாட்டு மைதானத்திலும் நடைபெற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டு பகுதிகளில் இருந்து கலந்து கொள்ளும் சிறந்த ஊர்திகளுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசு வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பரிசுப் பெறுமதி முதலாம் பரிசு 10,000 ரூபா, இரண்டாம் பரிசு 7500 ரூபா, மூன்றாம் பரிசு 5000 ரூபா, நான்காம் பரிசு 3500 ரூபா, ஐந்தாம் பரிசு தொடக்கம் பத்தாவது வரைக்கும் தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பரிசு வழங்கப்படும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. இப்பரிசுத் திட்டம் இரண்டு பகுதிகளில் நடக்கும் நிகழ்வுகளுக்கு வழங்கப்படும்.

இதில் பொது அமைப்புகளான கமக்கார அமைப்பு, வர்த்தக நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், தே.எ.பேரவையினர் பாடசாலைகள், கூட்டுறவு நிறுவனங்கள், பொது மக்கள் என கலந்து கொள்ளலாம் எனவும் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மதிய போசனத்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

# பயிற்சிநெறியை முடித்தோருக்கு ஆசிரிய நியமனம் வழங்கல்

(வவுனியா செய்தியாளர்).

கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்தவர்களுக்கான ஆசிரிய நியமனக் கடிதம் இன்று வழங்கப் படவுள்ளது.

இலங்கையில் உள்ள 17 தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் மூன்றாண்டு கால கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியைப் பின்பற்றி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கே இவ் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்கனவே நேர்முகப் பரீட்சை நடைபெற்று முடிந்துள்ளது. இவர்களுக்கே இன்று நியமனக் கடிதம் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் வைத்து வழங்கப்பட உள்ளது.

இவ்வாசிரியர்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (10)

## நேர்முகத்தேர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் உயர் கணக்கியல் கற்கை நெறிக்கான நேர்முகத்தேர்வு நாளைதொழில்நுட்ப கல்லூரி மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# இராணுவ, பொலிஸ் ரோந்து மட்டக்களப்பு நகரில் அதிகரிப்பு

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்புரைக்கமைய மட்டக்களப்பு நகரில் இரவு பகலாக இராணுவ பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

மேலும் இராணுவ நிலைகள் பலப்படுத்தப்பட்டு வருகிறது. பொலிஸார், இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைகளினால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அரசுவாக்குறுதி அளித்த விடயங்களை இதுவரை நிறைவேற்றாததால் சமாதானப் பேச்சுவார்த்தையிலும் சிரான் கூட்டத்திலும் கலந்துகொள்வதை விடுதலைப புலிகள் இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

# சுகாதாரத் தொண்டர்களை பதிவு செய்யக்கோரிக்கை

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் அரச வைத்திய நிலையங்களிலும் தனியார் வைத்திய நிலையங்களிலும் சுகாதாரத்தொண்டர்களாக பணியாற்றுபவர்கள் தமது சுய விபரத்தையும் தாங்கள் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிய விபரங்கள் அனைத்தையும் தமிழீழ சுகாதார சேவை நடுவப்பணியகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக் கொள்கின்றனர். (லோ)


## போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட அரச அலுவலர்கட்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் தேர்ச்சியினை வழங்கும் பொருட்டு கிளிநொச்சி கல்வி வலயத்தினால் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

பயிற்சி வகுப்புக்கள்.

**ஆரம்பப் பிரிவு,**
**உயர் பிரிவு** என இருவகையாக நடைபெறும்.
பயிற்சிக் காலம் 08 மாதங்கள்

ஆரம்பப் பிரிவு போதனாசிரியர்களுக்கு மணித்தியாலயம் ஒன்றிற்கான கொடுப்பனவு ரூபா 250.00 உயர் பிரிவு போதனாசிரியர்களுக்கு மணித்தியாலயம் ஒன்றிற்கான கொடுப்பனவு ரூபா 350.00.

**தகைமை:**

மொழி சார்ந்த (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) பட்டதாரியாகவோ அல்லது மொழி சார்ந்த பயிற்சிச்சான்றிதழ் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும். இளைப்பாறியவர்களும் இத்தகைமையுடைய ஏனையவர்களும் விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்படும் போதனாசிரியர்களுக்கு இப்பணியில் ஈடுபடும் காலத்திற்கு கடமை லீவு வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் சுயமாக விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து பூர்த்தி செய்து 05.05.2003 இற்கு முன்பாக வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு சேர்ப்பிக்கவும்.

**ப.அரியரத்தினம்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

(சி-8093)



(IDMS)

## மொடடல் வதிவிட தொலைபேசிகள்

- ☐ வடபகுதியின் எப்பாகத்திலும் பாவிக்கக் கூடியது.
- ☐ ஒருவருட உத்தரவாதம்.
- ☐ அன்ரனா, சார்ஜர், பற்றி இலவசம்
- ☐ மின்சார வசதிஇல்லாத பகுதியிலும்பாவிக்கக் கூடியது.
- ☐ இலகுவாக நீங்களே பொருத்தக் கூடியது.

விலை ரூபா 12100/=

தொடர்புகளுக்கு
ஜப்பான் இலத்திரனியல் பொறியியலாளர்கள்
இல.28, புகையிரத நிலைய வீதி,
வவுனியா – T.P 024 – 21702/21322/071 – 352332

01-05-2003 புதிய இலத்திரனியல் தொழில்நுட்ப வியாபாளர் கற்கை நெறி ஆரம்பம் (சனி,ஞாயிறு வகுப்புகள்)

(Radio, T,V, VCR,and Telephone பழுது பார்த்தல) (சி-7856)

## சிந்தனைக்கு



மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 26-04-2003

## பேசப்பட்ட அளவில் செயலில்லை!

"பேச்சுப் பல்லக்குத் தம்பி கால் நடை" போன்றுள்ளது வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்ட புனர்வாழ்வு-புனரமைப்பு நடவடிக்கைகளின் செயற்பாடு. அதாவது யுத்தநிறுத்த உடன்பாட்டின் பின்னர் அதிகம் பேசப்பட்ட விடயமான யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு-புனரமைப்புப் பணிகள் எவையுமே இன்னமும் செயற்படுத்தப்பட்டதாக இல்லை. இன்னும் பேச்சளவிலானதொன்றாகவே அவை உள்ளன.

'சிரான்' அமைக்கப்பட்ட போது அதற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்திற்கும், அதன் தற்போதைய பணிக்கும் இடையில் நிரம்பவே இடைவெளி இருப்பது போன்றுள்ளது. சிரான் தனது பணிகளைத் தொடங்கியதும் சர்வதேச நிதி உதவிகள் குவியும், புனர்வாழ்வு-புனரமைப்புப் பணிகள் வேகம் பெற்று மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் விரைந்து தீர்க்கப்படும் என்று நம்பிக்கை உருப்பெற்றது. இதற்கென அரசாங்கமும் தன்னளவிலான உதவிகளை அர்ப்பணிப்புடன் வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று 'சிரானின்' செயற்பாடானது அதன் பெயரையே அர்த்தமற்ற ஒன்றாக்கிவிடும் போல் உள்ளது. அதாவது வடக்கு-கிழக்கு உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழு (சிரான்) என்ற தலைப்பில் உடனடி மற்றும் மனிதாபிமான உதவிகள் என்பவற்றிற்கான பங்களிப்பை சிரான் மேற்கொள்ளத் தவறிவிட்டது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

'சிரான்' அமைக்கப்பட்ட போது, பெருமளவிலான சர்வதேச நிதி கிடைக்கப்பெறும் எனக் கூறப்பட்டது. தென்னிலங்கையில் இலங்கைக்குக் கிடைக்கப்பெறும் சகல நிதி உதவிகளும் வடக்கு-கிழக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப்படும் என்ற பிரச்சாரம்கூட முன்வைக்கப்பட்டது. இதனால், ஜப்பான் போன்ற உதவி வழங்கும் நாடுகள், சிங்களவர்களுக்கு, வடக்கு-கிழக்கு புனரமைப்பிற்கென ஒரு சிறிதளவு நிதி உதவியே கொடுக்கப்படும் என உறுதி கூறவேண்டிய சூழ்நிலை கூட இருந்தது.

ஆனால், தற்போதைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்குப் புனரமைப்பிற்கென நோர்வே அரசு மட்டும் சிறுதொகை ஒன்றை (மூன்று மில்.டொலர்) வைப்புச் செய்துள்ளது. ஏனைய நாடுகள் எவையும் உலக வங்கியில் வடக்கு-கிழக்குப் புனரமைப்பிற்கான நிதி எதையும் வைப்புச் செய்யவில்லை. ஒரு சில அரசுகள் வடக்கு-கிழக்கு புனரமைப்பிற்கான நிதியினை சிறிலங்கா அரசிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நோர்வே அரசு கூட இந்நிதியினை முன்னதாக வைப்புச் செய்தமைக்கு வாஷிங்டனில் கூட்டப்பட்ட சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோருக்கான டோக்கியோ மாநாட்டிற்கு முன்னோடி மாநாட்டிற்குத் தம்மை அழைக்கவில்லை என்பதையிட்டும் புலிகள் தமது அதிருப்தியை வெளியிட்ட பின்னரே ஆகும். ஒருவகையில் புலிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கிலானதே ஆகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ இவ்விடயத்தில் நோர்வே காட்டிய அக்கறையைக் கூடக் காட்டவில்லை என்றே கூறலாம். வடக்கு - கிழக்குப் புனரமைப்பிற்கான நிதி திரட்டுவதற்கோ அன்றி சிரானின் பணிகளை விரைவுபடுத்துவதற்கோ முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. சிறிலங்காவிற்கான நிதியினைப் பெற்றுக் கொள்வதிலேயே அக்கறை காட்டியது. வேறு விதமாகப் பார்த்தால் சமாதான முயற்சிகளில் காணப்பட்ட முன்னேற்றத்தினைக் காட்டி சிறிலங்கா அரசு தென்னிலங்கைக்கான நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளவே முயற்சித்து வருகின்றது.

அது மாத்திரமல்ல, அரசதரப்பினரின் பேச்சின் தொனியும் மாற்றம் காணக் கூடியதாகவுள்ளது. அதாவது யுத்தத்தினால் பெரும் அழிவிற்குட்பட்டிருந்த வடக்கு-கிழக்கிற்கெனச் சிறப்பான ஒரு புனர்வாழ்வு - புனரமைப்புத் திட்டம் ஒன்று தேவையற்றது போன்றதொரு மறைமுகத் தொனி அவர்களின் அண்மைய பேச்சில்வெளிப்படுவதாக உள்ளது. அதாவது வடக்கு-கிழக்கிற்கென விசேட அபிவிருத்திப் பணி சாத்தியமற்றதென்பது அவர்களின் கூற்றாகவுள்ளது.

அது மாத்திரமல்ல,அரசாங்கத்தின் சில செயற்பாடுகள் 'சிரான' அமைப்பின் நோக்கத்தையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அதாவது வடக்கு-கிழக்கிலுள்ள அரச நிறுவனங்கள், அமைப்புக்கள், அரசியற் கட்சிகள் போன்றவற்றிற்குச் சிறியளவு நிதியை ஒதுக்கீடு செய்வதும், அவற்றை அமுல் படுத்துவதும் சிரான் அமைப்பினை பலமிழக்கச் செய்யும் அரசாங்கத்தின் மறைமுகமான நடவடிக்கைகளாகவே கொள்ளத்தக்கதாகும்.

இந்த வகையில் அரசாங்கத்தின் செயலானது மந்தமானதாகவோ அன்றி பேச்சிற்கு மாறானதாகவோ இருக்கும் நிலையில்- 'சிரான' கூட்டங்கள் கூட்டப்படுவதும் பேசப்படுவதும் நேரவிரயத்தையும், பொருள்விரயத்தையுமே ஏற்படுத்தத்தக்கதாகும். ஆகையினால், 'சிரான்' தனது நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய வகையில் செயற்படவாய்ப்பில்லா நிலையில் அதன் கூட்டத்தினை ஒத்தி வைத்தல் என்ற தீர்மானத்தில் தவறு எதுவும் இல்லை.

# கடற்படைக்குள்ள குறைந்த அதிகாரத்தையும் பறிக்கக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஏற்பாடு

### - ஜே.வி.பியின் செயலர் விமல்வீரவன்ச குற்றச்சாட்டு

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் கடற்புலிகளைக் கட்டுப்படுத்த சிறிலங்கா கடற்படைக்குக் கிடைத்துள்ளகுறைந்தபட்ச அதிகாரங்களையும் பறிப்பதற்கு கண்காணிப்புக்குழுத் தலைவர் ஏற்பாடு செய்துள்ளார் என ஜே.வி.பி கண்காணிப்புக்குழு மீது குற்றம் சாட்டியுள்ளது.

புலிகள் பேச்சுவார்த்தையை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நிலை பற்றி பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது வீரவன்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக்குழுத் தலைவரின் அண்மைய கடிதத்தின்படி புலிகளுக்கு தனியான கடல் வலயம் ஒன்று சிபார்சு செய்யப்பட்டிருந்தது. நாட்டின் பாதுகாப்பிற்கும் இறைமைக்கும் பாதிப்பேற்படும் வகையில் விடுவிக்கப்பட்ட சிபார்சினைக் கண்டும் அரசு எந்த ஆட்சேபத்தையும் தெரிவிக்காதிருக்கிறது. இத்தீர்மானத்தின்படி புலிகளின் கடற்படையை தனிப்படைப்பிரிவாக ஏற்றுக்கொள்ள சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இதனால் இந்தியாவுக்கும் மற்றும் ஆசிய நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும் எனவும், இதனைத் தடுக்க சனாதிபதி முன்வர வேண்டும் எனவும் ஜே.வி.பி செயலர் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

# ரத்வத்தவின் பாதுகாப்பைப் பலப்படுத்த சனாதிபதி கோருவது சட்ட முரணானது

### -உள் துறை அமைச்சர் கடும் கண்டனம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதைப் புலிகள் இடைநிறுத்துவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து சிறைச்சாலையிலுள்ள முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டது குறித்து உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள குற்றவாளியான ரத்தவத்தவுக்கு பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு சனாதிபதி உத்தரவிட்டதானது சட்டவிரோதமானது. குற்றவாளிகளுக்கு பாதுகாப்புக் கேட்பது ஒரு சனாதிபதியின் செயலல்ல. ரத்வத்தவின் பாதுகாப்பிற்கு இப்போது பொறுப்பாக இருக்கும் சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை சனாதிபதியின் உத்தரவு குழப்பத் திற்குள்ளாக்கியுள்ளது என அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# தமிழீழ மக்களின் ஏகபிரதிநிதிகளும் ஏகபலமும் விடுதலைப் புலிகளே

### - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். அவர்கள் ஏற்கின்ற தீர்வை மட்டுமே தமிழீழ மக்கள் ஏற்பார்கள்.

அதன் பொருட்டு முழுத் தமிழர்களும் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமையின் கீழ் அணி திரண்டு நிற்கின்றது என்பதை இந்த மேதினம்- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அவரது அரசாங்கத்திற்கும் மட்டுமன்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடித்துரைப்பதாக அமைய வேண்டும் என அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

எதிர்வரும் மேதினம் தமிழீழ மக்களின் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக அமைகின்றது.

சென்ற மேதினம் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் சிறிது காலத்தில் நடந்ததொன்றாகும்.

சமாதானம், இயல்பு வாழ்க்கை, மீளக்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, மீன்பிடி, விவசாயத் தொழில்கள் மீதான தடைகள் நீக்கம் எனப் பல எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் நடைபெற்றது.

ஆனால் எதிர்வரும் மேதினமோ ஆறு சுற்றுப் பேச்சுக்களுக்குப் பின்பும் அவற்றின் முடிவுகள் சிறிலங்கா அரசினால் அமுல் செய்யப்படாமை, இயல்பு வாழ்க்கை திரும்பாமை, உயர் பாதுகாப்புவலயம் என்ற போர்வையில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர முடியாமை, புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் எதிர்பார்த்தபடி முன்னெடுக்காமை போன்ற பல்வேறு காரணங் களால் ஏழாவது சுற்றுப்பேச்சுக்கள் விடுதலைப் புலிகளின் தலைமையினால் இடைநிறுத்தப்பட்ட நிலையில் நிகழ்கின்றது.

எமது இனம், தமிழீழ தாயகமும் அதன் தன்னாட்சிக்கான சுயநிர்ணய உரிமை மற்றும் எமது தேசிய இனம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்து விடுதலைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டத்தின் மூலம் முன்னெடுத்தவர்கள் தேசியத் தலைவர் வே-பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கமே.

இவர்களே தமிழீழ மக்களின் ஏகபிரதிநிதிகளும் ஏக பலமும் ஆவார்கள்.

இந்தப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் சகல தமிழ் பேசும் மக்களும் கலந்துகொண்டு எமது ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வேண்டுகின்றது.

# நம்பிக்கையைப் பலப்படுத்தும் வகையில் நாடாளுமன்றம் கட்டியெழுப்பப்படும்

### - அமைச்சர் பீரிஸ் உரை

(கொழும்பு)

சிறுபான்மையினரின் காரிசனைகளை சிறிலங்கா அரசு கவனத்தில் எடுத்துக் கொள்வதாக ஜீ.எல்பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரின் உரிமை குறித்த மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளை தமது அரசு தொடர்ந்தும் மேற்கொள்ளும் என்றும் இம் முயற்சிகளுக்கு சிறுபான்மையினர் உட்பட அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவுகளும் வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிறுபான்மையினரை சிறிலங்கா அரசு ஓரம்கட்டவில்லையெனத் தெரிவித்த அவர் அவர்களின் நம்பிக்கையினைப் பலப்படுத்தும் வகையில் நாடாளுமன்றம் கட்டியெழுப்பப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# இறுதியாட்டத்திற்கு அணிகள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் சுனியர் பிரிவில் சிங்கராஜா ஜெயப்பிரகாஸ் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான போட்டிகளின் இறுதியாட்டத்திற்கு 15 வயதுப் பிரிவில் இரு அணிகளும், 19 வயதுப் பிரிவில்இரு அணிகளும் தெரிவாகியுள்ளன.

எட்டுப் பாடசாலைகள் கலந்து கொண்ட இப்போட்டிகளின் இறுதிப் போட்டிக்காக 15 வயதுப் பிரிவில் வட்டக்கச்சி ம.வி, கிளிநொச்சி ம.வி ஆகியனவும் 19 வயதுப் பிரிவில் உருத்திரபுரம் ம.வியும், கிளிநொச்சி ம.வியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்போட்டியின் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு உருத்திரபுரம் ம.வி மைதானத்தில் நடைபெறுமென கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கினர் தெரிவித்துள்ளனர். (பா)

"மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள்"

# ஆனையிறவு வெற்றி விழாவில் நூல் வெளியீட்டு விழா

ஈழநாதம் நாளேட்டில் தொடர்ச்சியாக வெளிவந்த மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள் என்னும் கட்டுரைத் தொகுதியின் வெளியீட்டு வைபவம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆனையிறவில் நடைபெறவுள்ளது.

ஆனையிறவுப் பெரும்தளத்தை விடுதலைப்புலிகள் மீட்டெடுத்த 3 ஆம் ஆண்டு வெற்றி விழாவிலேயே இந்நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் வடபோர் முனைச்சமரில் ஆனையிறவு, பளை முதலானவை மீட்கப்பட்டமை நேரடியாக களத்திலிருந்து சங்கர் என்பவரால் இக்கட்டுரைத் தொடர் எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க இரு தரப்பிடமும் யாழ். ஆயர் கோரிக்கை

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லுமாறு யாழ். ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் சிறிலங்கா அரசு ஆகியவற்றின் தலைமையகங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இருதரப்பும் மனந்திறந்து இதய சுத்தியுடன் பேச வேண்டும் எனவும் அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையில் பேசப்படும் விடயங்களை இரு தரப்பும் உடனடியாக அமுல்படுத்த வேண்டும் எனவும் வெறுமனே பேசுவதால் எந்தவித பயனும் இல்லை எனவும் ஆயர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டமை குறித்து நோர்வேயின் இலங்கைக்கான பிரதிநிதிகள் யாழ். ஆயரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

## புலிகளின்...

றோம். இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் ஜப்பான் பூரண ஆதரவை தெரிவிக்கின்றது. இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதிலும் ஜப்பான் உறுதியாகவிருக்கின்றது.

டோக்கியோவில் நடைபெறவுள்ள மாநாடு வடக்கு - கிழக்கு உட்பட இலங்கையின் புனரமைப்புப் பணிகளுக்கும் அபிவிருத்திக்கும் மிக முக்கியமானதாகக் கருதப்படுவதால் இந்த மாநாட்டில் மிக முக்கியமான விடயங்கள் ஆராயப்படுவது அவசியமானது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடல் பிரதேச...

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட மட்டில் இந்த முயற்சி கருத்தாழம் மிக்கதாக அமையும்.

அரசாங்கம் வேண்டுகோள் விடுக்குமாணால் இந்தியா அதனை ஆக்கபூர்வமாக ஆராயும்.

சகலரும் சமத்துவமாக நடத்தப்படுவதை உறுதி செய்யும் விதத்தில்இனப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு இருதரப்பினரும் முயற்சி செய்யவேண்டும்.

விடுதலைப்புலிகள் பேச்சிலிருந்து விலகியமை அரசியல் தந்திரோபாயம் ஆகும்.

புலிகள் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க நிபந்தனைகளை விதிக்கும் அறிகுறி தென்படுகின்றது. இதனைப் புரிந்துகொண்டு தகுந்தமுறையில் அரசு நடந்து கொள்ளும் என நம்புகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி), மஹஜன எக்சத் பெரமுன, லங்கா சமசமாஜ கட்சி, தேசிய சமாதான முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் படி இரு தரப்பினரையும் கோரி கடிதம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

## முன்னாள்..

கல்லூரியில் ஆரம்பக்கல்வியையும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியையும், உரோமைப் பாப்பரசரின் வேத போதக கல்லூரியில் தத்துவ இறையியல்கல்வியையும் கற்று 1942 இல் கலாநிதி பட்டத்தையும் பெற்றார்.

1941 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர், பல கத்தோலிக்க பாடசாலையில் கல்விப் பணியை புரிந்தும் பங்குப்பணிகளை மேற்கொண்டவர். இவர், 1967 இல் திருமலை - மட்டுநகர் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

1973இல் யாழ். துணை ஆயராக பொறுப்பேற்றவர், 1992 ஆம் ஆண்டு வரை இப்பதவியை வகித்தார்.

தனது பணிக்காலம் முழுவதும் இடைவிடாது தமிழ் மக்களின் விடுதலைக்காக உறுதியோடு குரல் கொடுத்தவர் குறிப்பாக அகில உலகத்திற்கு தமிழர் பிரச்சினையை பகிரங்கப்படுத்தி, நீதி கேட்டு உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக யாழ். பேராலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அன்னாரின் இறுதிச்சடங்குகள் திங்கள் (28.04.2003) மாலை 4.00 மணிக்கு யாழ். பேராலயத்தில் இடம்பெறும்.

# வட்டக்கச்சி கொலை தொடர்பாக இரண்டாவது சந்தேக நபர் கைது

வட்டக்கச்சி சந்தையடிப் பகுதியில் கடந்த 9-ம் திகதி நடைபெற்ற நாகராசா இராமச்சந்திரன் என்பவரது கொலை தொடர்பாக இரண்டாவது முக்கிய சந்தேக நபர் தமிழீழக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவதினம் முதல் தீவிரமாகத் தேடப்பட்டு வந்த இவர் நேற்றுக் காலை எட்டுமணியளவில் வட்டக் கச்சி சிவிக்ஸ் சென்ரர் பகுதியில் வைத்து வட்டக்கச்சி காவல்பணி மனையினரால்கைது செய்யப்பட்டார்.

தலைமறைவாகியிருந்த இவர் வட்டக்கச்சிப் பகுதியில் கடந்த புதன் கிழமை முதல் நடமாடுவதாக மக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் மாலை முதல் காவல்துறையினர் எடுத்த தீவிரநடவடிக்கையினால்மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.(12)

## பேச்சுவார்த்தை...

நாடுகளில் நடந்தாயிற்று. ஆனால் அரசியல் தீர்வு குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துவிட்ட நிலையிலும் பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் தொடர்ந்தும் அகதிமுகாங்களிலும் நலன்புரி முகாங்களிலும் முடங்கி வாழ்கின்றனர். அத்தோடு யுத்த நிறுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கை திருப்தி தரவில்லை எனவும் அவர் பிரதமரிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இந்நிலையில் வடக்கு - கிழக்கை கட்டியெழுப்புவதற்கான நிதி இன்னும் வழங்கப்படவில்லை. கொடுக்கப்பட்ட நிதி கூட இன்னும் வழங்கப்படவில்லை ஜோசப் பரராசசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தபோது இதற்கான நடவடிக்கைகளை தான் கண்டிப்பாக எடுப்பதாகவும் அதே நேரம் இப் பேச்சுவார்த்தை தொடர வேண்டும், சமாதானம் நிலைப்பட வேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## யுத்த நிறுத்த...

அமெரிக்கா தூதுவர் அஸ்லி வில்ஸ் சிறிலங்கா அரசாங்கத்துடனான சமாதான நடவடிக்கையைத் தொடர வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார். எமது நிலை குறித்த தவறான கருத்தொன்றை அவர் கொண்டிருக்கிறார்.

நாங்கள் சமாதான நடவடிக்கைகளிலிருந்து விலகிவிடவோ பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறிவிடவோ இல்லை. நாம் முன்னர் தீர்மானிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக்கவும் போர் நிறுத்த ஒப்பந்தத்திலுள்ள விடயங்களை அமுல்படுத்தவும் அரசாங்கத்திற்கு காலஅவகாசம் வழங்கும் வகையில் பேச்சுவார்த்தையை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோமே தவிர சமாதான நடவடிக்கைகளைக் கைவிட்டுவிடவோ அல்லது பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிவிடவோ இல்லை.

இதேவேளையில், அரசாங்கம் தமிழ் மக்களின் உடனடி மனிதாபிமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும். நாங்கள் பேச்சுவார்த்தைகளில் மனப்பூர்வமாக ஈடுபட்டுள்ளதுடன் அதில் எடுக்கப்படும் முடிவுகளைச் செயற்படுத்துவது குறித்தும் உறுதியாக உள்ளோம்.

உள்ளூரில் இடம் பெயர்ந்த அகதிகள் கடினமான சூழ்நிலையில் 10 வருடங்களுக்கு மேலாக அகதி முகாங்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தங்கி வருகின்றனர். போர்நிறுத்த ஒப்பந்தில் கூறப்பட்ட பல விடயங்கள் 15 மாதங்களுக்கு மேலாக நிறைவேற்றப்படவில்லை. கடந்த ஆறு மாதங்களாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளின் போது மீள்குடியமர்வது தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் உறுதியாகச் செயற்படுத்தப்படவில்லை.

தமிழ் மக்களின் துன்பங்கள் மற்றும் கடின நிலை குறித்து அஸ்லி வில்ஸ் கருத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. போர்நிறுத்த ஒப்பந்தம் ஆயுத மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதை பற்றியது மட்டுமல்ல. தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதைக் குறித்தும் கூறுகின்றது. சிறிலங்கா ஆயுதப் படைகள், தமது தேவைக்காக அகதி மக்கள் தமது வீடுகளுக்கும் கிராமங்களுக்கும் திரும்புவதற்கு உள்ள அடிப்படை உரிமையை மறுக்கின்றன. இது தான் பிரச்சினையாக உள்ளது என்றார்.

## புலிகளை...

ட்ட பாராளுமன்ற உறுப்பினர் பெ.இராதாகிருஸ்ணன், முன்னணியைச் சேர்ந்த ப.அன்பரசு, ஏ.பிரபாகரன், ஸ்ரீ.அஜித்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேற்று காலை 9.00 மணி முதல் பகல் 10.30 வரை இடம்பெற்ற இச் சந்திப்புப்பற்றி மேலும் அவர் குறிப்பிடுகையில்;

யுத்தநிறுத்தம் நீடிக்கப்பட வேண்டும் அதேநேரத்தில் தமிழ்மக்களை ஐக்கியப்படுத்துகின்ற நடவடிக்கைகளை நாங்கள் வேகப்படுத்த வேண்டும் என்பது பற்றி இச்சந்திப்பில் கலந்துரையாடியுள்ளோம்.

அரசாங்கப் பக்கத்தில் இருக்கின்ற குறைபாடுகள் தொடர்பாக கலந்து பேசப்பட்டது. இந்த தகவல்களை அரசாங்கத்திடம் கொண்டு செல்வதற்கு நான் சம்மதித்துள்ளேன்.

அங்கு அவர்கள் கூறுகின்ற பதிலினை மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் தெரியப்படுத்துவதாகக் கூறியுள்ளேன்.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் யுத்தத்திற்கு இந்த நாட்டை இட்டுச்செல்ல அவர்கள் விரும்பவில்லை.

அதேவேளை தங்களின் தன்மானத்தையும் அவர்கள் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை என்பதனை தெளிவாக உறுதிப்பட எடுத்துக் கூறியுள்ளனர்.

அத்துடன் மிகக் குறிப்பாக இந்த கால அவகாசத்தினை பயன்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகளை ஓரங்கட்டுவதற்கு அரசு தீர்மானித்தால் அதற்கு எந்தவிதத்திலும் விடுதலைப்புலிகள் பலியாகமாட்டார்கள் என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் உறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்த அறிக்கையினை பிரதமருக்கும், பத்திரிகைகளுக்கும் கொடுக்க முடிவு எடுத்துள்ளோம். அதில் சகலதையும் விளக்கமாக சொல்லவுள்ளோம்.

ஆரம்பத்திலிருந்து இத்தகைய முறுகல் நிலைக்கு என்ன காரணம் என்பதை தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து சொல்லப்படும் விளக்கங்களை உலகத்திற்கு எடுத்தியம்புவோம் என்றார். (சோ)

## ஏற்படுத்திய...

வைப்பதில்உதவிபுரிதல்மற்றும்போர்நிறுத்தஉடன்படிக்கையைக்கண்காணித்தலைதொடரவும் வழிசெய்யும்.

தற்போது நடப்பில் இருக்கும் போர்நிறுத்த உடன்படிக்கையின் கடப்பாடுகளைப் பேணுவது தொடர்பில் இருதரப்பும் தமது கடற்படைப் பிரிவுகளின் நடவடிக்கைகள் தொடர்பாக பொருத்தமான ஒழுங்கு முறைகளை செயற்படுத்துவதன் மூலமே ஜப்பானில் ஆறாம் சுற்றுப்பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டபடி போர் நிறுத்த உடன்படிக்கையைசரிவரப்பின்பற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் கடலில் வன்முறை சம்பவங்களைத் தடுக்க முடியும்.

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் தரையிலும் கடலிலும் ஆபத்தான சம்பவங்களை தவிர்ப்பதற்கு ஏற்ற வகையிலான சட்ட முறைகளைப் பேண வேண்டும் என்பதனை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

அண்மை நாட்களாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விவாதத்திற்கான அடிப்படையாக ஒரு முன்வரைபு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

இதன் பிரதிபலிப்புக்களாக பல முனைகளிலும் இது தொடர்பில் பல்வேறு வகையான சர்ச்சைக்குரிய கருத்துக்கள் பல திசைகளிலும் இருந்து எழுந்துள்ளன.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் போர்நிறுத்த உடன்படிக்கை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும்இடையில் கைச்சாத்திடப்பட்டது. அதன்பின் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளை ஒரு தனியான கடற்படை அலகாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என எம்மால் முதலில் வெளியிடப்பட்ட முன்வரைபில் பரிந்துரைக்கப்பட்ட வேண்டுகோள் தற்போது ஒரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்காக் கடற்படையினருக்கு சிறிலங்காவின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காக்க வேண்டிய கடப்பாடுகள் இருக்கின்றன. அத்தோடு இராணுவச் சமநிலை என்பது தற்போது நடப்பில் இருக்கும் போர்நிறுத்த உடன்படிக்கை சரத்துக்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களில் ஒன்றாகும். இருதரப்பும் கடலில் பயிற்சிகளில் ஈடுபடும் போது கடலோரத்தில் வசிக்கும் மீனவர்களின் அன்றாட இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இதற்கென ஒதுக்கப்பட்ட கடற்பரப்புக்களிலேயே தத்தமது பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இரு தரப்பும் தத்தமது படைக்கட்டமைப்பையும் அதன் சமநிலையையும் பேண வேண்டியதன் அவசியம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இருதரப்பு கடற்படைகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும், அரசியல் பிரதிநிதிகளும் இது தொடர்பில் எதிர்வரும் மே மாதம் ஏழாம் நாள் ஓமந்தைப் பகுதியில் உள்ள இருதரப்பு நடுநிலைப்பகுதியில் வைத்து கண் காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் நோர்வே அரசின் ஏற்பாட்டில் சந்தித்துப் பேச முடிவு செய்யப்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு எப்படியாவது போர் நிறுத்த உடன்படிக்கையினை சரியான முறையில் நடைமுறைப்படுத்தி இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வுகளைக் கொண்டு வருவதற்கு தன்னாலான முனைந்து ஆதரவையும் தொடர்ந்தும் வழங்கும்.

சிறிலங்கா கடற்படையின் பங்கு தொடர்பான கோட்பாடுகள் போர் நிறுத்த உடன்படிக்கையின் முதலாம் சரத்தின் மூன்றாம் பந்தியில் விரிவாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இச்சரத்தின் நடைமுறைகள் மீண்டும், மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. கடலில் வன்முறைச் சம்பவங்களை தடுப்பதற்கான நடைமுறைகள் தொடர்பாக எமது முன்வரைபில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தாம் அனுப்பி உள்ள முன்வரைபு தொடர்பில் தமது நிலைப்பாடுகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் தமக்குத் தெரியப்படுத்துவர் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


# சாவு அறிவித்தல்

## திரு. செல்லையா சபாபதி

**கைதடி, நாவற்குழி**

**நீர்ப்பாசனப் பிரிவு உதவியாளர்** DA

கைதடி நாவற்குழியை நிரந்தர முகவரியாகக் கொண்ட வரும் வவுனிக்குளத்தை தற்காலிக முகவரியாகக் கொண்டவருமான திரு. செல்லையா சபாபதி அவர்கள் 25 – 04 – 2003 நேற்று சுகவீனம் காரணமாக சாவடைந்தார்.அன்னார் காலம் சென்ற செல்லையா பார்வதியின் அன்பு மகனும் பூமணியின் அன்புக் கணவரும் காலம்சென்ற செல்லையா லெட்சுமியின் அன்பு மருமகனும், கண்ணன், ரமணா (வேணியன் போராளி) தரன், வதன், செல்வி ஆகியோரின் அன்புத்தந்தையும், அருணாசலம் காலம்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் லதாவின் அன்பு மாமனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்ப்பாசனத்திணைக்கள விதி**
**வவுனிக்குளம்.** (2279)

தகவல்
**குடும்பத்தினர்**


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.